**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**
**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
**Case No.CC. 291/2024**

| Deposition of Name | தேவிகா | Prosecution | LW-7 as PW -5 |
|---|---|---|---|
| Father Name | ராமச்சந்திரன் | Defence | |
| Station | கடலூர் ஆயுத படை | Taluk | சீர்காழி |
| Calling | | Age | 30/2025 |

Solemnly affirmed by Tmt.K. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

**11.07.2025 எதிரி ஆஜர்**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது கடலூர் ஆயுதபடை WPC-941 இரண்டாம்நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு சமயத்தில் நான் சீர்காழி AWPSயில் காவலராக (WPC-695) பணியிலிருந்த போது கடந்த 11.08.2024 ம் தேதி காவல் ஆய்வாளர் ஜெயலட்சுமி அவர்களின் உத்தரவின் படி சீர்காழி AWPS காவல் நிலைய குற்ற எண்.37/2023 இதச பிரிவுகள் 417, 420, 294b, 506 (i) கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்கின் புகார்தாரர் கண்ணகி என்பவரை மருத்துவ பரிசோதனைக்காக சீர்காழி அரசு மருத்துவ மனை மருத்துவர் பிரசன்னபிரியா என்பவரிடம் ஆஜர் செய்தேன். மருத்துவ பரிசோதனை முடித்து சான்று பெற்று நிலையம் வந்து ஆய்வாளரிடம் சமர்பித்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் எத்தனை மணிக்கு சீர்காழி அரசு மருத்தவ மனைக்கு சென்றேன் என்று என் முதல் விசாரணையில் குறிப்பிடடு சொல்லவில்லை என்றால் சரிதான். அசா.1க்கு எவ்வளவு நேரம் மருத்தவ பரிசோதனை நடந்தது என்றால் 2 மணி நேரம் நடந்தது. மேற்படி விபரம் பற்றியும் எனது முதல் விசாரணையில் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்ாறல் சரிதான். எத்தனை மணிக்கு மருத்துவர் எனக்கு தகவல் சொன்னார் என்றால் சுமார் 2 மணியளவில் தகவல் சொன்னார். என்னை ஆய்வாளர் எந்த தேதியில் எங்கு வைத்து விசாரித்தார் என்றால் 11.08.2024 அன்று காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். அசா.1 கண்ணகி கற்பமாக இருக்கிறார் என்பதற்கு என்னிடம் மருத்துவர் அறிக்கை எதுவும் கொடுக்கவில்லை என்றால்

தவறு மருத்துவர் எழுதி கொடுத்தார். தற்போது என்னிடம் காட்டப்படும் விபத்து பதிவேட்டில் பாதிக்கப்பட்ட பெண் கற்பமாக உள்ளார் என்று தமிழில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது மாதிரி தமிழில் எழுதி மருத்துவர் ஒரு போதும் சான்றளிக்கமாட்டார் என்றாலும் போலிசாரே எழுதி கொண்டு மருத்துவரிடம் கையொப்பம் வாங்கியுள்ளனர் என்றாலும் சரியல்ல. கற்பத்திற்கு காரணம் எதிரிதான் என்பதற்கு சான்றாக மருத்துவர் எந்த ஆவணமும் வழங்கவில்லை என்றால் சரிதான். நான் அசா.1 சொன்ன தேதியில் மருத்துவர் சிகிச்சைக்கு அழைத்து செல்லவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது**

**மறுவிசாரணை இல்லை.**